உ

"மென்மை கொள் சைவ நீதி
விளங்குக உலக மெல்லாம்"

# பதியிலக்கணம்

## சிவப்பொருளாய்வு

ஆக்கம்:

தொல்புரக்கிழார்
புலவர் நா. சிவபாதசுந்தரனர்

அகில உலக இந்து மாநாடு
கொழும்பு — இலங்கை
21 - 4 - 82 — 25 - 4 - 82

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பதியிலக்கணம்
## சிவப்பொருளாய்வு

ஆக்கம்:

தொல்புரக்கிழார், பொருணூல் விற்பன்னர்
புலவர் நா. சிவபாதசுந்தரனுர் அவர்கள்

ஓ ஓ ஓ

அகில உலக இந்து மாநாடு
நினைவு நூல்
கொழும்பு — இலங்கை
21-4-82 — 25-4-82

1982

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்பதிப்பு: 1982, சித்திரை
பதிப்புரிமை: நா. சிவபாதசுந்தரனார், தொல்புரம், சுழிபுரம்.
வெளியீடு: அகில இலங்கைக் கம்பன் கழகம்
அச்சுப்பதிப்பு: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, யாழ்ப்பாணம்.
விலை: ரூபா 4-50

# PATHY ILAKKANAM
## Research on Sivapporul

First Edition: 1982 - APRIL
Copy-right: N. SIVAPATHASUNTHARAM, Tholpuram, Chulipuram.
Publishers: ALL CEYLON KAMPAN KALAKAM
Printers: SAIVA PRAKASA PRESS, Jaffna.
Price: Rs. 4-50

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பதியிலக்கணம்

# சிவப்பொருளாய்வு

## முகவுரை.

பதியிலக்கணம் சொரூபம், தடத்தம் என்ற இரு திறத்தது. சொரூபம் என்பது இயற்கையாய் உள்ள வடிவம். இது தனி நிலையது. தடத்தம் என்பது பக்கம் இருத்தலால் அமையும் வடிவம். இதுவும் சார்பு நிலையது. தனி நிலையான சொரூபம் சிறப்பியல்பு என்றும், சார்பு நிலையான தடத்தம் பொதுவியல்பு என்றும் சொல்லப் படும். அதாவது, பிறிதோர் பொருளின் சார்பு பற்றித் தனிநிலையான சொரூபத்தில் உளப்படும் பொது வடிவியல் என்க.

ஒரு பொருளின் பண்பும் செயலும் தெரிதலே அப்பொருளைப் பற்றி அறிதற்கான நெறியாம். நீருக்குப் பண்பு குளிர். குளிர்தல் அதன் தொழில். பண்பு அடங்கி யிருத்தலே குணம் என்ப. அவ்வாறு அடங்காது அது வெளிப்படுதலே ஆற்றல் என்ப. இவைகளைக் குணம், குறி என்றிடலும் உண்டு. பொருளின் பெயரும் குறி எனப் படும். இவ்வகையான விளக்கக் குறிப்புக்கொண்டு பதி யிலக்கணத்தில் சிவப்பொருளின் திறத்தினைக் காண்பாம்.

## சொரூப விலக்கணம்

சைவ சித்தாந்தத்தின் முப்பொருள்களில் பதிப் பொருள் ஒன்று. பதிதல் உற்றவன் பதி எனப்படுவன்; பதிதலாவது, திருவருள் அம்மையைக் கலந்து உயிருக் குயிராகச் சிவப்பொருள் பொருந்துதலாம். பொருந்துத லாம் பதிதல் நிலையிற் பதிப்பொருள் இறையவன் எனப் படுவன். இறைநிலையான பதியின் குறிப்பெயர் 'சிவ' என்று சிவஞானிகள் செப்பியுள்ளனர். இச்சிவப்பெயரில் 'சி' என் பது பதியின் குணத்தைக் குறிக்கும். 'வ' என்பது அதன் ஆற்றலைக் குறிக்கும். குணரூபமான 'சி' சிவம் என்பது போல ஆற்றல் உருவான 'வ' சிவை எனப்படும். ஆகவே 'சிவ' என்பது சிவம், சிவை என்பனவற்றைக் குறிக்கும் பெயராம். இப்பெயர் பதி தன்னாற்றலாம் அருளுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயைந்து இரண்டாக நிற்கும் இணைப்பெயரே அன்றி; அருளோடு வெளிப்படாது தனியே ஒன்றென நிற்கும் தனிப்பெயரன்று என்பது தெளிவு. தெளியவே அப்பதியாகிய சிவப்பொருள் ஒன்றென நிற்கும் தனிநிலைப் பெயர் யாது? என்பார்க்கு, அதுவே 'சி' என்று சிவஞானிகள் கூறியுள்ளார்கள். இந்த 'சி' என்ற எழுத்து 'ஆதியெழுத்து' என்றும் அறையப்பட்டுள்ளது. ஆதிசத்தியோடு அமைந்த சிவன் எழுத்து என்பதே அதன் கருத்தாகும். எனவே 'சி' என்ற சிவன் எழுத்தில் அதன் ஆற்றலாகிய 'சிவை'யைக் குறிக்கும் 'வ' என்ற எழுத்துருவும் பொருந்தியிருக்கிறது என்று நாம் அத்தனி எழுத்துப் பொருளைக் கருத்துறல் வேண்டும். இதனை, ''அறிந்திடும் சக்கரம் ஆதியெழுத்து விரிந்திடும் சக்கரம்மேல் எழுத்து அம்மை'' (திரும: 1260) என்று திருமந்திரப் பாப்பகுதி காட்டும். இன்னும் 'சி' என்ற தனிநிலைப்பெயர் எழுத்து ''பேசா எழுத்து'' எனவும் பேசப்படும். இதன் பொருள் உரை நிலைப்படாது உணர்வளவாய் உணரப்படுவது என்பதாம். இதனால் இஃது அசபா மந்திரமாய் இனிதுறும். அசபையான சிகரத்தை நாவாற் சொல்லித் தியானிக்க வேண்டின் அதன் முறையாவது; 'சி' யின் ஆற்றலெழுத்தான வகரம் என்ற பேசுமெழுத்தைச் சிகரத்தின் இடமுன்னாகச் சேர்த்துச் 'சிவ' என்று செபிக்க வேண்டும் என்பதாம். ஆகவே தியான முறையில் 'சி' என்பதும் 'சிவ' என்பதும் பேதமற்றவை என்பது புலனாகின்றது. 'சி' என்ற பேசா எழுத்தே பதியிலக்கணத்தில் சொரூப இலக்கணமாம். பதியின் சொரூபக்குறியாகிய 'சி' என்ற பேசாவெழுத்தைப் பேசும் எழுத்தாக – சொரூபதடத்தமாக மலர்ச்சியுறச் சிவஞானிகள் எடுத்த முறையைக் காண்பாம். 'சி'யான சிவப்பொருளை – தத்துவப் பொருளைப் பொருளாற்றலுக்குரிய எழுத்தாக விரிவுபடுத்த வேண்டும். அதற்கு அவர்கள் சிவப்பொருள் எழுத்தில் மிகமிக நுண்ணியதாக மேவிய 'வ' என்ற ஆற்றலை யோகசத்தியால் அதனின்று வெளிக்கொணர்ந்து அவ்வெழுத்துமூலம் 'சி' யெழுத்தையும் அதற்குரிய பொருளையும் இயக்கலாம் எனத் துணிந்து 'சி' எழுத்தை உணர்வளவில் யோகம் புரிந்தனர். அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகக் காட்சியில் 'சி' எழுத்தில் மயங்கிய, குணவாற்றல் அக்குணப்பொருளில் இருந்து தனக்குரிய இயல்பில் மிகுந்து அசைந்து எழுவதையும், அவ்வெழுச்சியில் ஏற்பட்ட ஒல்லொளியில் அதன் பண்பும் பண்பியும் ஒருமித்து உள்ளூர ஓருருவாய் வெளிப்பட்டதையும் உணர்ந்தனர். அதாவது சிவப்பண்பு ஆண் பெண் உருவில் செம்பாதியாகப் பாடுற்று ஒளிவதை ஓர்ந்தனர் என்பதாம். இதனை, "மருவொத்த மங்கையும் தானும் உடனே உருவொத்து நிற்றமை ஒன்றும் உணரார்" (திரும: 1113) என்றும்; "ஓரெழுத்து ஈசனும் ஒண்சுடராமே" (திரும:949)என்றும் வரும் திருமந்திரப்பகுதிகள்காட்டும். 'இங்கு மருவொத்த மங்கை" என்றது 'சிவ' என்பதில் இடமுன்னுகும் 'வ'வ்வைச்சுட்டும். போகக்காட்சியில் சி யும், வ வும் முறையே வலம் இடமாகப் பக்கம் உற்று நிகழவே உடன் நிகழ்ச்சியாய் உருவுவொத்ததும், அந்த ஆண் பெண் உருமயக்க உண்மையை எவராலும் இப்மியளவேனும் இயம்புதல் இயலாததையும் குறிக்கவே, "உடனே உருவொத்து நின்றமை ஒன்றும் உணரார்"என்ருர். சுத்தசிவத்தின் சமன்நிலை வடிவமே 'சிவ' என்ற ஓர் எழுத்தெனக. இந்தச் சொருப தடத்தின் இயலை இன்னும் இனிதாகக் கூறின், சிறப்பு என்ற செஞ்சொல்லின் முதலெழுத்தான சிகரத்தின் நின்று, முழுமுதற் சிவனை விளக்கமுறச் செய்தற் பொருட்ட அதிலிருந்த ஆற்றல் என்ற முழுமுதற்சத்தி வெளிப்பட்டது. மலர் மணம் போன்ற அவ்வாற்றல் திருவருள் என்ற சிவை எனப்படும். அத்திருவருளாம் சத்தி தன்னுடம்பில் செம்பாதி கொள்ளச் சிவனுக்கு இடம் கொடுத்துப் பாதி நல்லாள் ஆகினுள். இதனுல் அச்சிவனும் பகவனுயினுன் என்க. 'சி' யாகிய சிவப்பொருள் தன்னுற்றலை வெளிப்படுத்தித் தனக்குச் சார்புப்பொருளாகப் பக்கப் பொருளாகக் கொண்டமையால் அது தனது சிறப்பியலை நுண்மையாக்கிப் பொதுவுருவாய்ப் பொற்புற்றது மாதொரு பாகனுகிய சிவப்பொருள் சிவையாகிய ஆற்றலின் அருநிலையால் பொருளியக்கமாகப் பொருந்தும்போது இரு பொருளும் இயங்கி இயக்க வடிவை இருத்தும் செவ்வியையே நாம் பொதுவடிவம் என்கிறேம். இதனைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமூலர், ''தங்கு பயந்தரு நீலமும் உடன்; மங்கையோர் பாகமாய் மாநட மாடுமே'' (திரும: 2734) என்று செப்பியுள்ளார். இன்னும் அவரே, ''இடங்கொண்ட சத்தியும் எந்தை பிரானும் நடங்கொண்டு நின்றமை நானும் அறிந்தேன்'' (திரும: 2722) என்று தம்மையும் உளப்படுத்தித் தம் அநுபவமாய் அருளியதையும் ஓர்க. இன்னும், திருமூலர் மாதொருபாகனை மன்னி, மாநடம் புரியும் மாபொருளைச் சுட்டிய ஓரெழுத்தாம் 'சி' யும் பொருளியக்கத்தை உணர்த்தும் இயல்பினது என்பார். ''கொண்ட இம் மந்திரங் கூத்தன் எழுத்தாய், பண்டையுள் நாவிற் பகையற விண்டபின் (திரும: 126) என்று அருளி எம்மை மேலும் தெளிவிக்கிறார். கூத்தன் ஐந்தொழில் சுட்டும் தெய்வம். அவ் ஐந்தொழில் நிமித்தம் சிவப்பொருளான கூத்தன் இயக்கச்சத்தியோடு இயைந்து இயக்கப்பொருளாய் இயங்குவதால் – கூத்தாடுவதால் அவனைக் குறிக்கும் எழுத்தும் அவன் பெயர் பெற்றதென்க. இவ்வாறான விளக்கங்களில் இருந்து சொரூபநிலை எழுத்து சொரூப தடத்தநிலைக்கும் உரித்தாயிற்று என்பதை ஆன்றோர் அகங்கொள்வர். இனி, 'சிவ' என்ற பெயரமைப்பு சிவஞானிகள் சிந்தையில் எவ்வாறு கொண்டனர் என்பதை ஆய்வுறும்போது, தனித்துவமாய் நின்ற 'சி' யாகிய சிறப்புநிலை எழுத்து ஈண்டு ஆற்றல் எழுத்தாகிய 'வ' கரத்தோடு இணைத்துவமாகி ஓரெழுத்தாய்ப் பொதுநிலைப் பட்டு ஒளிரும்போது பொருள்வண்ணமாக வனப்புநிலை வகைப்பட்டது. பொருள்நிலையும் பொருள் வனப்பு நிலையும் தனிநிலைப்படாமல் இணைநிலைப்பட்டதால் ''சிறப்பு என்னும் செம்பொருள்'' ஆயிற்று. 'சி' சிறப்பு என்பதால் 'வ' பொது என்பது சொல்லாமலே அமையும். சிவத்தின் பண்பின் வனப்பை 'வ' கரமாகிய எழுத்து அமைத்துக் காட்டுவதால் அது 'வனப்பு' என்ற சொற் பொருளைக் கொண்டது. சிறப்பு என்ற சொல்லின் முதலெழுத்தாகிய 'சி' யும், வனப்பு என்ற சொல்லின் முதலெழுத்தாகிய 'வ' வும், இணைந்தே 'சிவ' என்று பதிப் பொருளுக்குப் பொருந்தும் பெயராய்ச் சிவஞானிகள் தேர்ந்தனர் என்க. அந்தச் சிறப்பும் (சிவம்) வனப்பும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சிவை) தத்துவமாய்த் தலைப்படும் தன்மை, குளிரும் குளிர்தலும் எங்ஙனம் நீரினின்றும் பிரிக்க முடியாததோ அங்ஙனமான இயல்பினதென்க. இன்னும், எமது தமிழ் மொழியில் தமிழ் எழுத்தின் அசைவைப்பற்றி அறைய வந்த அருந்தமிழ்த் தொல்புலவோர் இணைக்குறில், குறில் நெடில் என்ற எழுத்துக்களை ஈரசைபெறாது ஓரெழுத்து ஓரசையாக நியதிப்படுத்திய நியமத்தோடும் ஒப்பிடலாம். மேலும், பதியின் சொரூபத்தைச் 'சிவ' என்ற ஓரெழுத்தின் நுட்பத்தைத் திருமூலர்,

> "மட்டவிழ் தாமரை மாதுநல் லாளுடன்
> ஒட்டி இருந்த உபாயம் அறிகிலார்
> விட்ட எழுத்தை விடாத எழுத்துடன்
> கட்டவல் லாருயிர் காக்க வல்லாரே" (திருமு: 894)

என்று விளக்கியுள்ளார். இம்மந்திரத்தில் விட்டெழுத்து என்றது 'வ' என்பதாம். விடாவெழுத்து என்றது 'சி' என்பதாம். ஓரெழுத்தாம் 'சி' யில் அகநிலையாக மயங்கிய அதனாற்றலாகிய 'வ' கரம் சியின் இடம் முன்னாய்ப் புறநிலைப்பட்டு நிற்றல், சிவபெருமானின் இடது பக்கத்தைத் தனக்குரிய இடமாகக் கொண்டு திகழும் திருவருள் அம்மையாகிய சத்தியைச் சுட்டுவதால் அது விட்டெழுத்தாயிற்று. 'சி' என்ற எழுத்தோ வரம்போல ஒன்றில் அகநிலைப்பட்டோ புறநிலைப்பட்டோ அமையாத நிலையினானதன்றி, விட்டெழுத்துடன் விட்டுப் பிரிவின்றி இருவேறுருவின் ஒரு பேர்யாக்கையாய் ஒட்டிச் சிவ என்று திகழ்வது சிவபெருமானின் ஆற்றல் எழுத்தாதலின், அது விட்டெழுத்து எனவும் பட்டது. இந்த வகரத்தைச் சிகரத்துடன் வழுவுறாது கட்டவல்ல சிவயோகிகளுக்கே அவ்வொட்டு நிலையின் நுண்மை அழகைத் துய்த்திட முடியும் என்று அம்மந்திரம் அறைந்துள்ளது எனக். எனவே, சிவப்பொருளின் மாதொருபாக நிலை காரணகாரிய முறையானதன்று, அது மாமுதல் என்ற மகா காரணமானது என்ப.

::::::::::::

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தடத்த இலக்கணம்.

சிவப்பெருமாளாம் பதியிலக்கணத்தில் விடாத எழுத்தாகிய 'சி' என்ற தனிநிலையும், விட்டெழுத்தாகிய 'வ' என்ற (சிவ) இணைநிலையையும் முறையே சொரூபம், சொரூபதடத்தம் என்றோம். சொரூபதடத்தமே தடத்த சொரூபமாகும்போது, தடத்தவிலக்கணம் தலைப்பட்டமையும், எனவே சொரூபதடத்தமாகிய 'சிவ' என்ற ஒரெழுத்தே தன்னியல்பில் மிகவேண்டும். தன்னியல்பில் மிகுதலாவது; 'சிவ' என்ற ஒரெழுத்தே ''சிவசிவ'' என்ற தடத்தத்துக்குரிய ஈரெழுத்தாகல் வேண்டும். இது சொரூபத்தைச் சொரூப தடத்தமாகிய 'வ' என்ற விட்டெழுத்தின் வனப்பாலே இயலுறும். அஃது எவ்வாறெனில், 'வ' என்ற சிவையாம் திருவருளம்மை சிவனார் விழையும் விருப்பமே தன்விருப்பமாகக் கொண்டு காமியாக வேண்டும். 'வ' ஆகிய சிவை காமாட்சியாகவே 'சி' என்ற சிவனும் காமனுவன். இவ்வாறு அவர்கள் காமவினோதம் புரிகையிலே பதியின் தடத்த வடிவம் தலைப்படுகிறது. இதனைத் திருமூலர்,

> ''மங்கையும் மாரனும் தம்மொடு கூடிநின்று
> அங்குலி கூட்டி அகம்புறம் பார்த்தனர்
> கொங்கைநல் லாளுங் குமாரர்கள் ஐவருந்
> தங்களின் மேவிச் சடங்குசெய் தாரே'' (திரும: 1167)

என்று திருமந்திரமாக அருளியுள்ளார். இம்மந்திரத்தில் சிவம் காமனுகும் உண்மை 'மாரன்' என்ற சொல்லால் புலனுகிறது. ''அங்குலி........ பார்த்தனர்'' என்பது, மாயையும் உயிர்க்கூட்டங்களும் தங்கி இருக்கும் அதோமுகமாம் கீழ்நோக்கிய முகத்தைப் பார்த்து அணுக்கூட்டங்களாம் துகளாவியைக் கிளப்பி விட்டுப், பின்புறம் நோக்க சத்தியருள் பெற்ற அருளோன் (சதாசிவம்), ஆண்டரன் (மகேஸ்வரன்), அரன் (உருத்திரன்), அரி (விஷ்ணு) அயன் (பிரமா) வரை உள்ள ஐவரைப் பார்த்தலாம். சடங்கு — ஐந்தொழில். கொங்கை என்பதும் சிவைசிவன் திருவடியில் தலைதாழ்தலைச் சுட்டும். மங்கையாகிய திரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருளும் மாரனுய்த் திகழுஞ் சிவனும் ஒப்பநின்று தம்மிற் கூடிக் காமவினோதம் புரிகையில் அறிவுப் பேரொளியாய் விளங்கும் பரமும், என்றும் உண்மையாய் உருப்படும் சத்தனுகிய பரமும் பேரருள் நிறைந்த சிவகாமியாகவே சிறப்பர். தடத்த வடிவத்தைத் தாழ்போட்டுத் திறக்கும் சிவப்பெருப் பெயராகிய "சிவசிவ" என்ற ஈரெழுத்தில் நாம் எழுதும்போது முதற்கண் அமையும் காரணத்தால் முன்னுள்ள 'சிவ' என்பது காலமுன்னுகும். இச் சொற்பொருளால் காலம் கடந்த சிவப்பொருளெனப் பெறப்படுவதாலும் அது "பராபரம்" ஆயிற்று. இதன் பின்னர் எழுதப்படும் "சிவ" என்பது இடமுன்னுகும். இதன் சொற்பொருளால் இச்சிவமும் காலநிலைக்கு உட்பட்டுக் காலங்கடந்த சிவப்பொருளாம் பராபரத்திற்கு இடமாம் இருக்கையாய் இலங்குவதால் அது பராபரையாயிற்று, இவ்வாறு பகுமுறையிற் பொருளும் (பராபரம்), பொருளாதாரமும் (பராபரை) 'சிவசிவ' என்று சமமாக இணையுற்றுச் "சிவ" என ஓரெழுத்தாகத் தொகுதலையும் நாம் தேற வேண்டும். இக்கருத்துண்மையைச் சிவயோகியாம் திருமூலர்,

> "ஆதி அனுதி அகாரணி காரணி
> சோதித் தனிச்சுடர் சொரூப மாய்நிற்கும்
> பாதி பராபரை பன்னிரண் டாதியே" (திருமः 1100)

என்று திருமந்திரமாய்ச் செப்பியுள்ளார். இம்மந்திரத்தில் அம்மை தொடக்கமும் தொன்மையும் தனக்கோர் காரணமும் இல்லாதவளாயும், தான் எல்லாவற்றுக்குங் காரணமாய் உள்ளவளுமாவள் என்று அவளின் இயற்றிறன் இயம்பி, அவள் சோதி என்ற தடத்தத்தில் தனிச் சுடர் என்ற சொரூபியாய் நிற்பாள். இந்த நிற்றல் பராபரத்திற்குப் பாதிபராபரையாய் அமையும். இவ்வமைப்பும் ஆதாரம் ஆறு, நிராதாரம் ஆறுகப் பன்னிரு கலையாகும். இப்பராபரையே நடப்பாற்றலாகிய ஆதிசத்தி என்றும் சொல்லப்படும் என்ற வகையான கருத்துக்கள் அமைதல் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சிவசிவ'' என்ற மிகு பெயரையுடைய தடத்த விலக்கணத்தை இன்னும் நுண்ணிதாகப் பகுத்தும் பொருள் உணரலாம். நுண்பகுமுறையில் காலமுன்னை ''சிவ'' என்பது 'சி' என்றும் 'வ' என்றும் பகுக்கலாம் அன்றே; இதில் சி' பராபரமாகும். 'வ' பராபரையாகும். இவ்வாறே இடமுன்னை சிவ' என்பதும், 'சி' பரம் என்றும், 'வ' பரை என்றும் அமைவதாகும். இந்தப் பகுமுறையால் காலமுன் சிவப்பொருளுக்கும் இடமுன் சிவப் பொருளுக்கும் நிலையில் உள்ள வேற்றுமை நன்கு விளக்கமாகிறது. இவ் விளக்கம் காரிய முறைநிலையில் பராபரம் காரணப் பொருளாயும், பரம் காரியப் பொருளாயும் அமையும் என்பதை நமக்குச் சுட்டிற்று என்க. இன்னும் காலமுன்னை காரியப் பகுப்பு முறை தடத்த சொரூபம். இடமுன்னை காரியப் பகுப்புமுறை தடத்த தடத்தம். தடத்தசொரூபம் அறிவுப் பேரொளிப் பரம். இது சிவப்பெயர் எழுத்து நான்கு கூறுகளில் '(சிவசி)வ' என்று அமையும். தடத்த தடத்தம் உண்மையாம் சத்துப்பரம். இதுவும் அப்பெயர் எழுத்து நான்கு கூறுகளில் சி(வசிவ) என்று அமையும். இந்தப் பெயர் எழுத்துக்கள் நான்கு கூறுகளின் இணைப்பு அமைப்பையும், பிரிப்பு அமைப்பையும் முறையுற ஆயும்போது தடத்த விலக்கணத்தின் சொரூபத்தையும் தடத்தத்தையும் நன்கு விளக்கும். இதனை இனிக் காண்பாம்.

தடத்த சொரூபத்தின் சிவசிவ எழுத்து முறைக்கூறுகள் '(சிவசி)வ' என்று பொருளுற அமையும். அடைப்புக் குறியுள் அமையும் இணைப்பு எழுத்துகள் சிவப் பொருளைச் சிறப்பாயுப், அவ்வாறு அமையாத பிரிப்பு எழுத்து அப் பொருளைப் பொதுவாயும் அமைந்துளது என்று நாம் நம் மனத்தகத்துள் இருத்துதல் வேண்டும். இன்னும் எழுத்துக்களின் இணைப்பு பிரிப்புகளை யோகமுறையாவும் சித்தத்துள் இருத்துதலும் வேண்டும். '(சிவசி)வ' என்பதிலுள்ள அடைப்புக் குறியில் சொரூபத்திலும் தடத்தத்திலும் அமைந்த இரு சிகரங்களும், முறையே முன் பின்னாக அமைந்துள்ளன. இந்தச் சிகரங்களுக்கிடையே சொரூப சிவத்திற்கு உரிய 'வ' கரம் உள்ளீடாக அமைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மூன்று எழுத்துக்களின் செறிவிலேயே — பிணைப் பிலேயே தடத்த சொரூபத்தின் 'சி' கரம் தலைப்படலா யிற்று. எவ்வாறெனில் அடைப்புக்குறியில் உள்ள மூன்று எழுத்துக்களில் முன்னுள்ள காலமுன்னுள 'சிவ' என்ற ஈரெழுத்து சொரூப தடத்தத்திற்கு உரியது. மூன்றும் எழுத்தாகிய 'சி' இடமுன்னுக்குரியது. இந்த இடமுன் எழுத்தைக் காலமுன்னுள சத்தி எழுத்தாம் வகரம் தன் னுற்றலாகக் கதுவி ஈர்த்துத் தன்தகவுக் குடன்பட வைத்துக்கொண்டது. இந்த வைப்பில் இடமுன் சிகரத் தால் காலமுன் வகரம் 'வசி' யாகத் தன்னியல்பில் மிகுந் தது. மிகவே, காலமுன்னுள சொரூபசிகரமும் 'வசி' என்ற இடச் சொரூபத்திற்கு ஏற்பக் கீழ் முகமாய்த்தன் சொரூப வியல்பில் இம்மியும் மாறுது சமப்பட்டுச் செயல்முறையில் தடத்தமாயிற்று. இங்ஙனமே சொருப 'வகரமும் இட முன் 'சி'கரத்தின் செறிவால், பராபரை என்ற பொருட் தன்மைநிலையிற் கீழ்ப்பட்டு உடன் நிலைக்கு ஏற்பப் பரா சத்தி' என்ற இடப்பெயரை — தடத்தப் பெயராகப் பெற்றதெனவும் தெளிதல் வேண்டும். இவ்வாறே கால முன் சியும் வவும் இடமுன்சியாயும் வவாயும் மாறுநிலைப் பட்ட தென்க. மாறுநிலையாவது சொரூபதடத்தில் 'வ' ஆதாரமாயும் சி ஆதேயமாயும் நின்ற சீர்நிலை; தடத்த சொரூபத்தில் சி ஆதாரமாயும் வ ஆதேயமாயும் மாறு கொளலைக்குறிக்கலாம். சுருங்கக் கூறின் 'சி' உடலாயும் 'வ' உயிராயும் உருப்படுதலாம். இதனைத் திருமந்திரம் ''பெண்ணில்லாளும் பிரானக் கரத்துள்ளே'' (திருமம: 911) என்று சத்தி சிவமாகும் சால்பினை இயம்பியுள்ளது. நிற்க, தன்னுடனே சொரூபவடிவில் அகமுகப்பட்டு, இடமுன் சிகரத்தால் மறைப்புற்ற காலமுன்னுள 'வ' என்ற வனப் புப் பொருள் — காலமுன் சிகரத்தை உந்தவே, பராசத்தி சொரூபதடத்தத்தின் அடைப்புக் குறியின் முன் புறப்பக் கலின் அமைந்த வகரத்தைத் தன் வினைப்பினது ஆற்றற் பொருளாக அழகுபடுத்தி அதனைச் சிறக்க வைத்தது. இதுவே தடத்த சொரூபத்தின் பொதுவியல்பு என்க. தடத்த சொரூபத்தின் அமைந்த உருவப் பெயரான 'சிவ' என்பதில் சியில் மறைந்த சொரூப வகரமும், அவ்வாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமையாது தன் பக்கலில் வெளிப்புற்ற இடமுன்னுன தடத்தவகரமும் என்ற இருவகரங்கள் அச் 'சி' யில் இட முன் பொருளாய் இனிதுற்றதாலேயே அக்காலச் சிகரம் இடம் என்ற பொதுவியல்பு பெறலாயிற்று. இன்னும் அச்சியின் அகத்துள் அமர்ந்தவனப்பு வகரம் வனப்பினது ஆற்றலாக மிகவே, அச்சியின் பக்கம் அமர்ந்த இடமுன் வகரம் நடப்பாற்றலாகமிகும் நீர்மையதாயிற்று என்று எண்ணுதல் வேண்டும். திருமூலர் தடத்த சொரூபத்தின் பொதுவியலே, ''ஆதி அனுதி ஆய பராசத்தி; பாதிபரா பரைமேலுறை பைந்தொடி'' (திரும: 1096) என்று பாதி பராபரையாகவே பராசத்தி அளவு பகரும் பாங்கை நினை மின். திருமூலர் இக்கருத்துச் செய்தியைப்

''பாகம் பராசத்தி பைம்பொன் சடைமுடி
ஏகம் இருதயம் ஈரைந்து திண்புய
மோக முகமைந்து மூக்கண் முகந்தோறும்
நாக முரித்து நடஞ்செய்யும் நாதர்க்கே'' (திரும:1193)

என்று இயம்பியுள்ளார். தத்துவநீர்மையான பராசத்தி யின் செய்தியைப் பகர்ந்த திருமூலர் பராபரத்தின் செய் தியையும்,

''ஆதி பராபர மாகும் பராபரை
சோதி பரமுயிர் சொல்லுநற் றத்துவம்
ஓதுங் கலைமாயை யோரிரண் டோர்முத்தி
நீதியாம் பேதமொன் பானுடன் ஆதியே'' (திரும: 2503)

என்று தடத்த நீர்மையாய்க் கூறிய திறனும் ஓர்க. இனி நாம் தடத்த சொரூபம் தடத்தமாதலைக் காண்பாம்.

''சிவசிவ'' என்ற தடத்தப் பொருட் பெயரில் கால முன்னுன சிவ என்பதின் கருப்பொருளை உரிப்பொருளாகச் ''(சிவசி)வ'' என்று விரித்துத் தடத்த சொரூபத்தைத் தெளிந்தோம். இங்ஙனமே இடமுன்னுன ''சிவ'' என்ப தின் கருப்பொருளை உரிப்பொருளாகச் ''சி(வசிவ)'' என்று விரித்துத் தடத்தத்தின் தடத்தத்தைத் தெளி வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடத்த சொரூபத்தின் சிறப்புநிலை 'சிவ' என்ற காலமுன் எழுத்தால் முன்னுற அமைவது. அதன் பொது நிலை இடமுன் 'வ'கரத்தால் பின்னுற அமைவது. அங்ஙனமே தடத்த தடத்தம் 'சிவ' என்ற இடமுன் எழுத்தால் பின்னுற அமைவது. இதன் பொதுநிலை "சி" என்ற காலமுன் எழுத்தால் முன்னுற அமைவது. தடத்த சொரூபத்தில் காலமுன் சிகரமும், இடமுன் சிகரமும் இணைந்து முழுமைப்பட்டு மெய்யாகக் காலமுன் வகரம் உயிராக அமைவது போல்; தடத்த தடத்தம் காலமுன் வகரமும் இடமுன் வகரமும் இணைந்து முழுமைப்பட்டு மெய்யாக இடமுன் சிகரம் உயிராக உளப்பட அமைகிறது. இதனைத் திருமூலர்,

> "அண்ணல் இருப்பதவனக் கரத்துள்ளே
> பெண்ணினல் லாளும் பிரானக் கரத்துள்ளே"

என்று ஆதாரவாதேயமாகக் காட்டுந் திறன் காண்க. தடத்தமான அவ்விரண்டு 'வ' கரங்களில் நடுவுற்ற இடமுன் சிகரத்திற்குக் காலமுன்ன 'வ' கரம், அச்சிகரத்தில் செறியும் போது நடப்பாற்றலாகவும், அவ்வாறே அதன் இடமுன் வகரம் அச்சிகரத்தின் வனப்பாற்றலாகவும் நாம் தெளிதல் வேண்டும். கால நடப்பாலும் இடவனப்பாலும் அமைந்த மெய்யாக, இடமுன் சிகரம் என்ற சிவம் அம்மெய்யின் உயிராய் உளப்பட்டுத் தடத்தத்தின் சிறப்புருவம் சான்றது. இத்தகு தடத்த சிறப்புருவுக்குப் பொதுநிலைவடிவாய் அவ் அடைப்புக்குறியில் அகப்படாது அதன் முன்புறத்தே நின்ற காலமுன் சிகரம் என்க. இச்சிகரமும் தன்வனப்பை உட்கரந்து கொண்ட முழுமைச் சிகரமாதலின் முழுமுதற் பொருள் என்க, இம்முழுமுதற்பொருளான சிகரம் தனது வனப்பாற்றலான வகரத்தை இடமுன் சிகரத்துக்கு நடப்பாற்றலாக நின்று நலக்க விட்டதால் அது செயல் நிலையில் பதிமுகப்பட்டது. இதனால் பராபரம் என்பது பரம் எனப் பதிநிலைக்குரிய பெயரைப் பெற்றது. இப்பரமே சிவம் என்றும் சொல்லப்படும். கால

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன் வனப்பாற்றல் இடமுன் சிகரத்தில் இயைந்ததும் அஃது அந்நிலைப் பொருளுக்கேற்ப நடப்பாற்றலாக நல த்து அவ்விடமுன் சிகரத்தை மேலும் முன்னுற முயங்க வைக்கவே அது தன் இயற்கையான வனப்பாகிய வரத்தை தன்னோடு ஒட்டவைத்துச் சத்தி சிவமாகச் சான்றது. இந்தச்சால்புப் பொருளையே சான்றோர் 'பரை' என்றனர். இது சிவை என்றும் ஆதிசத்தி என்றும் சொல்லப்படும். தடத்த விலக்கணத்தில் தலைப்பட்ட 'சிவசிவ' என்பதின் 'சி' (வசிவ), என்ற வகையின் முறையில் இயைந்த பொதுக் கருத்தை இதுவரை விளக்கினோம். இனிச் சிறப்பாக அப்பொருட் கருத்தை விளக்குவாம்.

தடத்த சொரூபத்தில் நிலைப்பெற்ற 'சிவ' என்பது திருமந்திரத்தில்;

''தாங்கி உலகில் தரித்த பராபரன்
ஓங்கிய காலத் தொருவன் உலப்பிலி
பூங்கிளி தங்கும் புரிகுழ லாளன்று
பாங்குடன் ஏற்பப் பராசத்தி போற்றே''

(திருமு: 1220)

என்று கூறப்பட்டுள்ளது. இச்செய்யுளில் பராபரனுக்குப் பராபரை எனக்கூறாது பராசத்தி என்று சொல்லியது; தடத்த சொரூபத்தில் பராபரையின் ஆற்றலே சத்தியுரு வாய் அமைந்ததாதலின் அவ்வாறுஅறையப்பட்டதென்க. எனவே இவ்விரண்டு பெயர்கள் பொருளால் ஒன்றாயினும் நிலையால் வேறுதல் தெளிக. இம்மந்திரம் தடத்த சொரூ பம் பரவெளியைப் பரிணமிக்கச் செய்கிறது என்பதையும் உரைக்கிறது. இன்னும் பராபரம் பராபரையின் ஆற்றலை பாருலகம் வனப்புற இடமுன் சிகரத்திற்கு விட்டாலும் அதனியல் ''ஓங்கிய காலத்தொருவன், உலப்பிலி'' என்று இயம்பி விளக்கும் திறனும் இம்மந்திரத்தில் கருத்துறு தலைக்காண்க. தடத்தம் விளக்குறும் எழுத்தில் அமைந்த 'வசி' என்ற எழுத்தில் 'வ' என்பதின் அருமைப் புடமை இன்னொரு மந்திரத்தில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நின்ற பராசத்தி நீள்பரன் தன்னெடு
நின்றறி ஞானம் இச்சையு மாய் நிற்கும்
(திரும, 1112)

என்று திருமூலர் திருவாய்மலர்ந்தருளியுள்ளார். கால முன் எழுத்தில் விட்டெழுத்தான "வ" கரம் இடமுன் சிகரத் தோடு ஒட்டும் போது அச்சிகரத்தின் வனப்பியலின் கிரியை (நடப்பு) ஆக அமையாது, ஞானம் (வனப்பு) இச்சை (விழைவு) ஆக அமைந்தது. இந்நிலையில் 'வசி' முழுமையான தடத்தமாகச் சிறக்கவில்லை. காலமுன் வகர வாற்றலால் நடப்புற்ற சிகரம் அச்சிறப்பியலினால் தன் இடமுன்னையத் தனித்திலங்கிய 'வ' கரத்தை ஈர்க்கவே அது தன்னில் இலங்கிய நன்றறியும் கிரியாசத்தியாய் இலங்கியதால் அதனோடு கலந்து முழுமையான தடத்தத் தடமாகத் தலைப்பட்டு "வசிவ" என்று விளங்கியதென்க. இந்த முழுநிறை தடத்தவியலைத் திருமூலர்,

"நின்ற பராசத்தி நீள்பரன் தன்னெடு
நின்றறி ஞானமும் இச்சையு மாய்நிற்கும்
நன்றறி யுங்கிரி யாசத்தி நண்ணவே
மன்ற னவற்றுள் மருவிடுந் தானே" (திரும: 1112)

என்று சிறப்புறக் கூறியுள்ளார். இம்மந்திரத்தில் இடமுன் சிகரமான சிவபெருமானை 'மன்றன்' என்று கூத்தப் பிரானைக் கூறிய சிவஞானம் உன்னுதற்குரியது. அதாவது இடமுன் 'சி' பொருளாகாது பொருளியக்கமானது என்று நாம் தெளிவதற்கு அஃது உதவுகிறதன்றோ. வசியின் நிலையியலை நன்கு புலப்படுத்துவது கிரியாசத்தியான நடப்பாற்றல் என்பதை "நன்றறியுங் கிரியாசத்தி" என்ற தொடரால் அமையும், காலமுன்னை சிகரத்தின் நின்றுவிட்ட வெழுத்தாகிய 'வ' என்பதையே "நின்ற பரசாத்தி" என்று சுட்டப்பட்டது. நிற்க,

தடத்தத் தடத்தம் அடைப்புக்குறியில் அமைந்த "வசிவ" என்பது "வ" என்று நுண்மையாய் அமைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்ற பராசத்தியாகும். அதாவது, மரமும் அதன் வைரமும் போல் ''பரனும் பரையும்'' ''சிவ'' என்று இட வெளியாய் இலங்குகையில் பரையாகிய சத்தி வனப்பாற்றலாகிய பராசத்தியாய் நிற்கும். மேலும் அவ்வாற்றல் தானாய் விளங்கும் சிவனுக்கும், தன்னை நாடும் ஆருயிர்கட்கும் தொழில் அறிவுகளுக்கு வழியாய் நின்று விழைவாகிய இச்சையாகவும் நிற்கும். ஆருயிர்கட்கு நடப்பாற்றலாகவும் நிற்கும். திருவருட்கூத்தினையும் திறம்பட நடிக்கும். இதனால் ஆருயிர்கட்கு அவ்வடியின் கீழ் அழுத்துவிக்கும் அன்புப் பொருளாகவும் நிற்கும். உலகங்களைப் படைத்து உயிர்களை உய்த்து உடனாய் இருந்து சிவப் பொருள் செலுத்தும் முறைமையில் தன் அன்பாற்றலாகிய இச்சையினால் ஆதியாற்றல், அறிவாற்றல், தொழிலாற்றல் விழைவாற்றல் என்ற இவைகள் வெளிப்படைப் பெயர்பெற்று நாடொறும் திருவருட்டொழில் ஐந்தினை நடத்தியருள்வர். இன்னும் அப்பொருள் ஆன்மா தன்னிருள் தகைவதற்கு அயராது பேரன்பும் பெருங்காதலும் கொண்டு பல்கால் அழைக்கும் அழைப்புக்கிணங்கித் திருவுருவும் கொள்வர். அவ்வுருவங்கள்,

''சிவமொடு சத்தி திகழ்நாதம் விந்து
தவமான ஐம்முகன் ஈசன் அரனும்
பவமுறு மாலும் பதுமத்தோன் ஈறு
நவமவை யாகி நடிப்பவன் தானே'' (திருமு: 1776)

என்ற திருமந்திரத்தின்படி ஒன்பது கோலங்களாகத் திகழும் என்க. இதனை இன்னும் விரித்துக்கூறின், எப்பொருட்கும் சார்பென-தடத்தமென நின்று எஞ்ஞான்றும் இன்பவடிவமாய் இலங்கும் மெய்ப்பொருள் பரசிவம் பரசத்தி, பரநாதம், பரவிந்து, சதாசிவம், ஈசன், அரன், அரி, அயன் என்னும் ஒன்பது நிலையுள் நிற்கும். இது பரநிலையாகும். இந்நிலையினை எய்திய ஆன்மவர்க்கங்களும் இப்பெயர்களைப் பெறுவர். சதாசிவ மெய்யாகிய அருளோன் அருவுருவநிலை, இந்த அருவுருவ நிலையினின்றே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவநிலே ஈசன், அரன், அரி, அயன் என்ற நான்கும் தோன்றும் தடத்த தடமான உருவவும் உலகமும் பர இலக்கணமாக இருப்பதை,

"வெளிகால் கனல்அப்பு மேவுமண் ணின்ற
தளியா கியதற் பரங்காண் அவன்றன்
வெளிகால் கனல்அப்பு மேவுமண் ணின்ற
வெளியாய சத்தி யவன்வடி வாமே (திரும: 2425)"

என்ற திருமந்திரத்தில் தெளியலாம். இந்தத் தடத்துள் தடத்தமாய்த் தலைப்படும் ஆதிபிரானை அம்மையோடு கூடிய அப்பனுகத் திருமூலதேவர்,

"இருளார்ந்த கண்டமும் ஏந்து மழுவுஞ்
சுருளார்ந்த செஞ்சடைச் சோதிப் பிறையும்
அருளார்ந்த சிந்தையெம் ஆதி பிரானைத்
தெருளார்ந்ததென் உள்ளே தெளிந்திருந் தேனே"

(திரு மந். 1710)

என்றும்;

"எண்ணில் இதயம் இறைஞான சத்தியாம்
விண்ணிற் பரைசிர மிக்க சிகையாதி
வண்ணக் கவசம் வனப்புடை இச்சையாம்
பண்ணுங் கிரியை பரநேத் திரத்திலே"

(திருமந் 1714)

என்று ஆதிசிவனை இதயம் – ஞானசத்தி, சிரம் – பராசத்தி சிகை – ஆதிசத்தி, கவசம் – இச்சாசத்தி, நேத்திரம் – கிரியாசத்தி ஆகும் என்று ஆதிசிவைக்குரிய நீர்மையான மெய்யாகக் காட்டும் திறனையும் தேர்க. இவ்வாறு தடத்த இலக்கணத்தில் சிவனுடை திருவுறுப்புக்கள் அனைத்தும் திருவருளாற்றலே என நாம் தெளிவுபடல் வேண்டும். மேலும் சிவப்பொருளை பதியிலக்கண முறையில் ஆராய்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம்

திருநெல்வேலி சைவ ஆசிரியர் கலாசாலைத்

துணைத் தலைவரும், பேராசிரியருமாக விளங்கிய

தத்துவ மேதை

உயர்திரு. பொ. கைலாசபதி *B, Sc.* (லண்டன்)

அவர்களின்

தெய்வ சிந்தனை நிலைக்கு

இந்நூல்

**காணிக்கை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

தொல்புரக்கிழார் பொருள் நூல் விற்பன்னர். புலவர் நா சிவபாதசுந்தரனுர் ஈழத் தமிழ்நிலம் பெற்ற சைவத் தமிழ்ப் புலவர். அடக்கம், ஆன்ற புலமை, எளிமை, இனிமை நிறைந்த சான்ருேன்.

"புறப் பொருள் வெண்பா மாலே ஆராய்ச்சி" "பரவெளித் தத்துவம்" என்ற நூல்களின் மூலம் தமிழ் நாட்டிலும் பரிச்சயமானவர்.

இவரின் 'பதியிலக்கணம் சிவப் பொருளாய்வு' என்ற தத்துவ நூல் எமது சைவ ஞானிகளின் தெய்வத் திருவுளத்தை இனிது காட்டுகிறது. இந்நூலே அகில இலங்கைக் கம்பன்கழகம் வெளியிடுவதில் மட்டிலாமகிழ்ச்சி அடைகிறது.

வாழ்க புலமை. வளர்க சைவநெறி.

அகில இலங்கைக் கம்பன் கழகம்

வாசிகசாலே வீதி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.
16-4-82

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவப்பிரகாச அச்சகம், யாழ்ப்பாணம், இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org